339

# THE SHORT FILMS IN BATTICLOA DISTRICT AT THE PERIOD OF 2000-2013. AND THE CHALLANGES FACED BY THE DIRECTORS, AND THE DEVELOPMENTS.

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
02 FEB 2015
VANTHARUMOOLAI,
CHENKALADY.

MR. YOGARASA SUJEETHAN

2007/2008

FAC339
Project Report
Library - EUSL
06 MAR 2015
EASTERN UNIVERSITY, SRI LANKA.

DEPARTMENT OF FINE ARTS

FACULTE OF ARTS AND CULTURE

EASTERN UNIVERSITY, SRILANKA

2013

PROCESSED
Main Library, EUSL

# பொருளடக்கம்


நன்றியுரை

முன்னுரை

இயல் -01

1. **குறும்திரைப்படங்கள் பற்றிய ஓர் அறிமுகமும், அதன் எண்ணக்கருவும், உலகில் குறும்திரைப்படங்களின் தோற்றம், இலங்கையில் அதன் ஊடுருவல்களும், பரம்பல்களும்.**

1.1 குறும்திரைப்படங்கள் பற்றிய ஓர் அறிமுகம், அதன் எண்ணக்கருவும்.

1.2 உலகில் குறும்திரைப்படங்களின் தோற்றமும், இலங்கையில் அதன் ஊடுருவல்களும், பரம்பல்களும்.

இயல் -02

2. **மட்டக்களப்பு இயக்குநர்களும், அவர்களது குறும் திரைப்படங்களும் - அட்டவணைகளகள்**

2.1 மட்டக்களப்பு இயக்குநர்களும், வெளிவந்த அவர்களது குறும்திரைப்படங்களும் - ஓர் அட்டவணை.

2.2 மட்டக்களப்பில் வெளிவர இருக்கும் குறும் திரைப்படங்களும், புதுமுக இயக்குநர்களும்- ஓர் அட்டவணை.

2.3 கால வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்த மட்டக்களப்பு குறும்திரைப்படங்கள்- ஓர் அட்டவணை.

இயல் -03

3. காலவரையறைகளை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்த மட்டக்களப்பு குறும்திரைப்படங்களும், அதன் கதைக்கருவும் அக் குறும்திரைப்படங்களின் சில இயக்குநர்களுடனான நேர்காணலும், கலந்துரையாடல்களும், அனுபவப் பகிர்வுகளும்.

3.1 2000 தொடக்கம் 2006 வரையான ஏழு வருட காலகட்டங்களில் வெளிவந்த மட்டக்களப்பு குறும்திரைப்படங்களும் அதன் கதைக்கருவும், அக் குறும்திரைப்படங்களின் சில இயக்குநர்களுடனான நேர்காணலும், கலந்துரையாடல்களும், அனுபவப் பகிர்வுகளும்.

3.2 2007 தொடக்கம் 2010 வரையான நான்கு வருட காலகட்டங்களில் வெளிவந்த மட்டக்களப்பு குறும்திரைப்படங்களும் அதன் கதைக்கருவும் அக் குறும்திரைப்படங்களின் சில இயக்குநர்களுடனான நேர்காணலும், கலந்துரையாடல்களும், அனுபவப் பகிர்வுகளும்.

3.3 2010 தொடக்கம் 2011 வரையான இரண்டு வருட காலகட்டங்களில் வெளிவந்த மட்டக்களப்பு குறும்திரைப்படங்களும் அதன் கதைக்கருவும் அக் குறும்திரைப்படங்களின் சில இயக்குநர்களுடனான நேர்காணலும், கலந்துரையாடல்களும், அனுபவப் பகிர்வுகளும்.

3.4 2013 தொடக்கம் 2013 கார்த்திகை மாதம் வரை வெளிவந்த மட்டக்களப்பு குறும்திரைப்படங்களும் அதன் கதைக்கருவும் அக் குறும்திரைப்படங்களின் சில இயக்குநர்களுடனான நேர்காணலும், கலந்துரையாடல்களும், அனுபவப் பகிர்வுகளும்.

இயல் -04

4. வெளிவரவிருக்கும் மட்டக்களப்பு குறும்திரைப்படங்களும் , அதன் இயக்குநர்களுடனான ஓர் அறிமுகமும், அக்குறும் திரைப்படங்களின் சில இயக்குநர்களுடனான கலந்துரையாடல்களும்.

இயல் -05

5. பொதுவாக இலங்கையிலும், மட்டக்களப்பிலும் குறும் திரைப்படங்கள் எதிர்கொள்ளும் சவால்களும் , மட்டக்களப்பு குறுந்திரைப்பட வரலாற்றில் அதன் இயக்குநர்கள் எதிர்கொண்ட சவால்களும் , அவர்களுடனான நேரடி அனுபவப் பகிர்வுகளும்.

   5.1 இலங்கையிலும், மட்டக்களப்பிலும் குறும்திரைப்படங்கள் எதிர்கொள்ளும் சவால்கள்.

   5.2 மட்டக்களப்பு இயக்குநர்கள் எதிர்கொண்ட சவால்களும் அவர்களுடனான நேரடி அனுபவப் பகிர்வும்.

இயல்-06

6. குறும்திரைப்படங்கள் குறித்தும் , மட்டக்களப்பு குறும்திரைப்பட வளர்ச்சி குறித்தும் எனது ஆய்வின் மூலமான ஓர் மதிப்பீடு

முடிவுரை

உசாத்துணை

தகவல் தந்தோர்

பின்னிணைப்புக்கள்

## முன்னுரை

“மட்டக்களப்பு மாவட்டத்தில் 2000 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதிக்குள் உருவான குறும்திரைப்படங்களும், அதன் வளர்ச்சியும், இயக்குநர்கள் எதிர்கொண்ட சவால்களும்” எனும் இவ்வாய்வுக் கட்டுரையானது பதின்நான்கு வருட காலப்பகுதியினை உள்ளடக்கியது. மட்டக்களப்பில் உருவான குறும்திரைப்படங்களையும், அதன் கதைக்கருவினையும் அக்குறும்பட இயக்குநர்கள் வாயிலாக நேரடியாகவே அறிந்து கொண்டேன்.

பிரதேசத்தில் ஏற்பட்ட கடந்தகால யுத்த சூழல் மற்றும் தொழில் நிமித்தம் காரணமாக சிலர் வெளிநாடு சென்று விட்டனர். மேலும் சில தகவல்களை அக்குறும்திரைப்பட தயாரிப்பாளர்கள், கலைஞர்களுடனான கலந்துரையாடல்கள் மூலம் பெறமுடிந்தது. தூரங்களுக்குச் சென்ற சில கலைஞர்களை வாய்மொழி மூலமாகவும், தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு குறுந்திரைப்படம் சார்ந்து கலந்துரையாடிய போது அவர்களது குரல்களை பதிவு செய்து சான்றாக வைத்திருக்கின்றேன்.

மேலும் கிடைக்கப்பெற்ற அவர்களது சில ஒளிமுகங்கள்(DVD, CD) சுவரொட்டிகளையும் ஒன்று சேர்த்து ஆவணப்படுத்தியுள்ளேன். ஆனால் இலங்கையில் முதல் முதலில் எந்த குறும்படம் தோன்றியது? என்ற வரலாறு பற்றி நூல்களோ, தகவல்களோ கிடைக்கவில்லை. அது சார்ந்து கேட்ட போது பலரும் அறிந்திருக்கவில்லை. கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு பல பிரமுகர்களது கலந்துரையாடல், சந்திப்புக்களை மையமாகக் கொண்டும் தேடல் தொடந்தது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

இது குறித்து குறும்படத்துறையில் உள்ளவர்கள் அதனை ஆய்வு செய்கின்றவர்கள், குறும்பட விசகர்கள், ஆர்வலர்கள், இலங்கையின் மூத்த இயக்குநர்கள், எழுத்தாளர், ஊடகவியலாளர்கள் ,கலைஞர்கள் தொலைக்காட்சித் துறையில் உள்ளோர் வாயிலாக பெற்றுக் கொண்ட தரவுகளை தேடியதன் மூலம் பல விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

அவற்றை விட ஆய்வாளனாகிய நான் ஒரு குறும் திரைப்பட இயக்குநராகவும் இத்துறையில் சில காலம் என்னை பரிணமித்துக் கொண்டதால் இலகுவாக தகவல்களை உள்வாங்கிக் கொள்ளவும், விளங்கிக் கொள்ளவும் முடிந்தது.

## ஆய்வுத்தலைப்பு:

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2000 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதிக்குள் உருவான குறும்திரைப்படங்களும் , அதன் வளர்ச்சியும் , இயக்குநர்கள் எதிர்கொண்ட சவால்களும்.